FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129876

1. District : Thoothukudi மாவட்டம் | PS: Vigilance and Anti-Corruption Thoothukudi காவல் நிலையம் | Year 2025 ஆண்டு | FIR No. 07/2025 மு.த.அ. எண் | Date 29.07.2025 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as Amended in 2018. | Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 14.07.2025 Evening | Date to : நாள் வரை 28.07.2025

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.07.2025 | Time : நேரம் 08.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.07.2025 | Time : நேரம் 09.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Kovilpatti Municipality office, Kovilpatti, Thoothukudi District 65 Kms North West

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.செல்வகுமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் செல்வராஜ்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி 16/70B, ஊரணி தெரு 3, கோவில்பட்டி, தூத்துக்குடி - 628501

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி.நவீனா, பில் கலெக்டர், கோவில்பட்டி நகராட்சி அலுவலகம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் தெரிவிப்பதில் தாமதம் N8

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

--

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு --

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் --

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-- தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது --

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V.Annalakshmi Rank ...Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29.07.2025

29/7/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: **29.07.2025 at 10.15 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் **V. ANNALAKSHMI**
Rank: நிலை Inspector of Police எண்.....

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.07/2025

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 29.07.2025-ம் தேதி காலை 08.30 மணிக்கு V.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, ஊரணி 3வது தெரு, கதவு எண்.16/70B என்ற முகவரியில் குடியிருந்து வரும் திரு.செ.செல்வக்குமார் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவில் அவரது மாமனார் திரு.N.துரைக்கண்ணு நாடார் கடந்த 08.08.2022 -ம் தேதி கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலக தான செட்டில்மெண்ட் ஆவணம் எண்.8591/2022ன் மூலம் கோவில்பட்டியில் உள்ள வீட்டினை அவரது மனைவி திருமதி.காளீஸ்வரிக்கு எழுதிக் கொடுத்ததாகவும், அவரது மாமனார் கடந்த 7 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டதால், மாமனார் பெயரில் உள்ள வீட்டுத் தீர்வையினை அவரது மனைவி காளீஸ்வரி பெயரில் மாற்றம் செய்வதற்கு 21.03.2025ல் கோவில்பட்டி நகராட்சியில் மனு அளித்திருந்ததாகவும், மேற்படி வீடுகளின் வீட்டுத் தீர்வையினை பெயர் மாற்றம் செய்வதற்கு கோவில்பட்டி நகராட்சி பில் கலெக்டர் நவீனா ரூ.10,000/- லஞ்சம் கேட்பதாகவும், எனவே தன்னிடம் லஞ்சம் கேட்கும் கோவில்பட்டி நகராட்சி பில் கலெக்டர் நவீனா என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கோவில்பட்டி நகராட்சி பில் கலெக்டர் நவீனா பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 07/2025 பிரிவு 7(a) of Prevention of Corruption Act, 1988 as Amended in 2018-படி 29.07.2025-ம் தேதி காலை .09.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:

அனுப்புநர் : S.செல்வகுமார்,வயது 45, த/பெ.L.செல்வராஜ். 16/70B,ஊரணி 3வது தெரு, கோவில்பட்டி, தூத்துக்குடி - 628501. பெறுநர் : காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா / அம்மா, நான் கோவில்பட்டி ஊரணி 3வது தெருவில் குடியிருந்து எனது மனைவி காளீஸ்வரியுடன் சேர்ந்து கடந்த 15 வருடங்களாக ஸ்ரீஅனந்தம்மாள் ஏஜென்சி என்ற பெயரில் ரவை, மைதா பாக்கெட் மாவுகளை மொத்தமாக கொள்முதல் செய்து கோவில்பட்டியில் உள்ள சிறு கடைகளுக்கு விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். எனது மாமனார் திரு.N.துரைக்கண்ணு நாடார் கடந்த 08.08.2022-ம் தேதி அவருக்கு சொந்தமான கோவில்பட்டி சர்வே எண்.364/15 கோவில்பட்டி டவுண், ஊரணி தெரு எண்.3-ல் கதவு எண்.70A, 70B மற்றும் 70C வீடுகளின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள வீடு மற்றும் காலி இடத்தை எனது மனைவி திருமதி.காளீஸ்வரிக்கு கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலக தான செட்டில்மெண்ட் ஆவணம் எண்.8591/2022-ன்படி எழுதிக் கொடுத்திருந்தார்கள். எனது மாமனார் திரு.N.துரைக்கண்ணு நாடார் கடந்த 7 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். மேற்படி இரண்டு வீட்டிற்கும் 07.01.2025-ம்தேதி 2024-25ம் வருடத்திற்கு வீட்டுத் தீர்வை எனது மாமனார் பெயரில் செலுத்தி அதற்கு ரசீதும் வாங்கினேன். பின்பு இந்த வீட்டுத் தீர்வையை எனது மாமனார் பெயரில் இருந்து எனது மனைவி திருமதி.காளீஸ்வரி பெயருக்கு மாற்றம் செய்வதற்கு 21.03.2025 ல் கோவில்பட்டி நகராட்சியில் தீர்வை பெயர் மாற்ற ஒரு விண்ணப்பமும் அதனுடன் மேற்படி வீட்டிற்கு உரிய தான செட்டில்மெண்ட் பத்திரம் எண்.8591/2022 நகல், இரண்டு வீடுகளுக்கும் 2024-2025-ம் ஆண்டிற்கு 27.01.2025-ல் தீர்வை செலுத்திய இரசீது நகல் ஆகியவற்றையும், பெயர் மாற்ற கட்டணமாக ஒரு வீட்டிற்கு ரூ.300/- வீதம் இரண்டு வீட்டிற்கு சேர்த்து மொத்தம் ரூ.600/- பணம் செலுத்தி அதற்கு தனித்தனியாக இரசீதுகள் வாங்கி அந்த இரசீது நகலையும் சேர்த்து விண்ணப்பத்துடன் இணைத்து கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் கொடுத்தேன். அதன் பின்பு 10 நாட்கள் கழித்து கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் இருந்து ஒரு பெண் பணியாளர் 9361460015 என்ற செல் நம்பரிலிருந்து எனது செல் நம்பா 7010409056- க்கு பேசிவிட்டு எனது மேற்படி வீடுகளை ஒரு முறையும் பின்பு ஒருவாரம் கழித்து RI-யுடன் மீண்டும் ஒரு முறையும் வந்து அளந்து பார்த்து விட்டு சென்றார்கள். பின்னர் 25.04.2025ம் தேதி

கோவில்பட்டி நகராட்சி அலுவலகம் சென்று வீட்டிற்கு வந்து அளந்து சென்ற அந்த பெண் ஊழியரை நேரில் சந்தித்து தீர்வை பெயர் மாற்றம் என்னாச்சு என்று கேட்டேன். அதற்கு அவர் வீட்டின் அமைப்பில் சிறு மாறுதல்கள் உள்ளதால் பழைய தீர்வையே விதிக்க இயலாது என்றும், மேற்படி வீடுகளுக்கு புதிய வரி மதிப்பு செய்து தான் பெயர் மாற்ற முடியும், புதிய சொத்து வரி விதிப்பிற்கு கட்டணமாக வீட்டிற்கு தலா 10 ரூபாய் வீதம் இரண்டு வீடுகளுக்கும் 20 ரூபாய் செலுத்த வேண்டும் என்று சொல்லி என்னிடம் ரூ.20/-ஐ என்னிடம் வாங்கி சென்று 70B மற்றும் 70C ஆகிய இரண்டு வீடுகளுக்கும் ரூ.20/-ஐ செலுத்தி விட்டு 25.04.2025 தேதியிட்ட இரசீது நகல் என்னிடம் கொடுத்தார்கள். அதன் பின்னர் மேற்படி பெயர் மாற்றம் சம்பந்தமாக எந்த தகவலும் இல்லாததால் 02.07.2025 அன்று செல்போன் எண் 9361460015-ற்கு அழைத்து தீர்வை இரசீது பெயர் மாற்றம் குறித்து அவரிடம் கேட்டேன். அப்போது அந்த பெண்மணி தான் அந்த சீட்டிலிருந்து மாறி விட்டதாகவும், அந்த சீட்டில் முன்பு கேஷ் கவுண்டரில் பணிபுரிந்த நவீனா என்பவர் பணிபுரிகிறார் என்றும், அவங்ககிட்ட உங்களது பெயர் மாற்றம் சம்பந்தமான கோப்பு உள்ளது என்றும், இனிமே அவங்க தான் உங்களை தொடர்பு கொள்வார்கள் என்றும் சொன்னார். அதே போல் 14.07.2025-ம் தேதி பில் கலெக்டர் நவீனாவும் 9600562874 என்ற எண்ணிலிருந்து எனது செல் எண் 7010409056-ல் தொடர்பு கொண்டு "நான் கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்திலிருந்து பில் கலெக்ட்டர் நவீனா பேசுகிறேன், வீட்டுத் தீர்வைகள் பெயர் மாற்றம் தொடர்பாக நகராட்சி அலுவலகத்திற்கு வந்து என்னை பாருங்கள்" என்றும் என்னிடம் சொன்னார். நானும் அன்று மாலையே கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு சென்று பில் கலெக்டர் நவீனா அவர்களை பார்த்தேன். அப்போது அவர் மேற்படி வீடுகள் தீர்வை பெயர் மாற்றம் செய்வதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.10,000/- வீதம் இரண்டு வீடுகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.20,000/- தாருங்கள் என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் கேஷ் கவுண்டரில் கட்ட வேண்டுமா என்று கேட்டதற்கு, இல்லை தன்னிடம் மேற்படி பணம் ரூ.20,000/- -ஐ தனியாக தாருங்கள், அது அலுவலக செலவிற்கும் மேல் அதிகாரிகளுக்கும் என்று சொன்னார். நான் கஷ்டப்படுகிறேன் அவ்வளவு ரூபாய் என்னால் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் ஒரு வீட்டிற்கு ரூ.5,000/- வீதம் இரண்டு வீட்டிற்கும் சேர்த்து மொத்தம் ரூ.10,000/- கண்டிப்பாக என்னிடம்

தாருங்கள் என்றும், அவ்வாறு பணம் கொடுத்தால் தான் உங்கள் வேலை நடக்கும் என்று சொன்னார். அதன் பின்னர் இரண்டு மூன்று முறையும் 21.07.2025-ம் தேதி நான் சென்னையில் இருந்த போது ஒரு முறையும் என்ன பணம் ரெடியாகிருச்சா என்று கேட்டார். அதற்கு நான் பணம் ரெடியாகவில்லை என்றும் சென்னையிலிருந்து திரும்பி வந்த பின்பு பார்க்கிறேன் என்றும் சொன்னேன். பின்பு 25.07.2025-ம் தேதி நான் நகராட்சி அலுவலகம் சென்று பில் கலெக்டர் நவீனாவை பார்தேன். அவர் என்னை நகராட்சி RI அவர்களிடம் என்னை அழைத்து சென்றார். அப்போது நகராட்சி RI எனது வீட்டு பெயர் மாற்ற பைலை பார்த்து விட்டு மாலையில் உங்கள் வீட்டை இன்னொரு முறை வந்து பார்க்க வேண்டும் என்றும் சொன்னார். பின்னர் 25.07.2025 மாலை எனது செல்போனில் பில் கலெக்டர் நவீனா தகவல் சொல்லிவிட்டு 10 நிமிடத்தில் RI-யுடன் எனது வீட்டிற்கு வந்து பார்த்து விட்டு போட்டோ எடுத்து விட்டு சென்றுள்ளார்கள். நான் அப்போது வெளியில் இருந்தேன். எனது மனைவி மட்டும் வீட்டில் இருந்தார். பின்பு 26.07.2025 அன்று பில் கலெக்ட்டர் நவீனா போன் பண்ணி என்னை கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு வருமாறு சொன்னார்கள். நானும் நகராட்சி அலுவலகம் சென்று பில் கலெக்டர் நவீனா அவர்களை பார்த்தேன். அவர், RI-யுடன் உங்க வீட்டை வந்து பார்த்து விட்டோம், அதற்கு தீர்வை எவ்வளவு வரும் என்று பார்த்துச் சொல்கிறேன் திங்கள்கிழமை வந்து அலுவலக செலவிற்கு கேட்ட பணத்தை கொடுங்கள் என்றார். அதன் பின்பு அவர் 28.07.2025ம் தேதி திங்கள் கிழமை போன் செய்து பணம் ரெடிபன்னிவிட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் வீட்டு தீர்வைக்கும் பணம் ரெடிபன்ன சொன்னீங்க எவ்வளவுன்னு சொல்லல அதான் இன்னும் நான் ரெடிபன்னவில்லை என்று சொன்னேன். அப்போது அவர் எனது ஒரு வீட்டிற்கு குடியிருப்பு பயன்பாட்டிற்கு 6 மாதத்திற்கு ரூ.785/-ம் மற்றொறு வீட்டிற்கு வணிக பயன்பாட்டிற்கு ரூ.1,087/- ம் தீர்வை வரும் என்றும் அதற்கு குப்பை வரி தனியாக வரும் என்றும் சொல்லிவிட்டு நாளை செவ்வாய்கிழமை 29.07.2025 மதியத்திற்குள் கண்டிப்பாக கேட்ட பணத்தை நகராட்சி அலுவலகத்திற்கு வந்து கொடுக்குமாறு சொன்னார். மேலும் வீட்டிற்கு தீர்வை பணத்தை தனியாக கட்ட வேண்டியிருக்கும், அதையும் தனியாக வைத்துக்கொள்ளுங்கள் என்றும் சொன்னார். நான் வீட்டில் வைத்து யோசித்து பார்த்ததில் எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத காரணத்தினால் இதுபற்றி லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தேன். எனது மனைவி பெயரில்

உள்ள வீடுகளின் தீர்வை இரசீதுகளை பெயர் மாற்றம் செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக ரூ.10,000/- கேட்கும் பில் கலெக்டர் நவீனா மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டு பத்திரநகல் மற்றும் சொத்து வரி மற்றும் பெயர் மாற்ற கட்டணம் செலுத்திய ரசீது நகல்களுடன் இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். பில் கலெக்டர் நவீனா என்பவரை கையும் களவுமாக பிடிக்க முழு ஒத்துழைப்பு தருகிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by S.செல்வகுமார், 29.07.2025. இணைப்பு : Sir, Received by me on 29.07.2025 at 08.30 hrs and verified the antecedents of both the complainant and the accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.07/2025 u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at 09.15 hrs. xxxxxx s/d., by V.ANNALAKSHMI 29.07.2025, Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது விசாரணைக்கும் எடுத்துக் கொண்டேன்.

29/07/2025
Inspector of Police
V & AC, Thoothukudi